கட்சியைச் சேர்ந்த ராஜமாணிக்கம் அவர்கள் கொண்டு வந்த சிமெண்ட் பிரச்னைமீது ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டேன். இதுதான் முக்கியம் என்று உங்களுக்கு தோன்றியிருந்தால் அவரை வாபஸ் வாங்கச் செய்துவிட்டு, இத எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கலாம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ட்சியினர் கொடுத்ததை நான் முறைப்படித்தான் எடுத்துக்கொண்டு வருகிறேன்.

(ஆ) கொள்கை விளக்கக் குறிப்புகள் கொடுப்பதில் தாமதம்

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, இண்டஸ்ட்ரீஸ் பற்றி வியாதம் நாளை இங்கே எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. ஆனால் அதுபற்றிய பாலிசி நோட் போன்றவைகள் இன்னும் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே தொழில்துறையின் செயலாளரிடத்தில் இதுபற்றி பேசிவிட்டேன். 11 அல்லது 12 மணியளவில் அவை தயாராகி உங்கள் அனைவருக்கும் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(4. அறிக்கை அளித்தல்)

பொது நிறுவனங்கள் குழு

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, 1977–78 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான மேற்படி குழுவின் பதினைந்தாவது அறிக்கையை" அதனுடைய தலைவன் என்ற முறையில் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்

(அ) உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 245-வது விதியின் கீழ், 1982-83 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்